# இரு இரட்சிப்புக்கள்

“நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி (Propitiation – சினம் தணித்து திருப்தி செய்தல்) அவரே நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாக இருக்கிறார்” 1யோவா 2:2

1. செய்தி வரிசையில், ‘காலையில் மகிழ்ச்சி’ என்ற பொருளில், குறித்த வேளையில் மனுக்குலத்தை ஆசீர்வதிப்பது தேவனுடைய நோக்கமாய் இருக்கிறது என்பதை தெளிவாக படித்தோம். சாத்தான், சத்தியத்தை நெறியினின்று புரட்டினதின் விளைவாக, (தப்பறைகளை சத்தியம்போல ஒளியின் வேஷத்தை எடுத்து கொள்ளச் செய்ததின் விளைவாக), அநேக நூற்றாண்டு காலமாக இந்த உன்னத மகிமையான நோக்கத்தை அறிந்து உணரக்கூடிய வழிகள் மறைந்திருந்தன. எனினும் தேவனுடைய வார்த்தையானது, எவ்விதம் இயேசு இம்மையிலோ அல்லது 1000 வருட யுகத்திலோ தம் மூலம் தேவனிடத்தில் வருகிறவர்களை முற்றும் முடிய (பூரணமடைந்து நித்திய ஜீவன் பெறும்வரைக்கும்) ரட்சிக்க வல்லவராய் இருக்கிறார் என்பதை தெளிவாகக் காட்டுகிறது. எபி 7:25.

### உலகத்துக்கான நமது ஜெபம்

2.1 இயேசு “உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலங்களிலே செய்யப்படுகிறது போல, பூமியிலேயும் செய்யப்படுவதாக” என்று அவரது மாதிரி ஜெபத்தில் (மத் 6:10) கூறினார். அதனை கிறிஸ்தவர்கள் தொண்டுதொட்டு, பாரம்பரியமாக ஜெபித்து வருகிறார்கள். தேவனுடைய ஆளுகை ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டு விட்டது என்பது சந்தேகப்படக்கூடியதில்லை. சிந்திக்கிற கிறிஸ்தவர்களில் அநேகருடைய மனங்களில், அதே சமாதானமும், அதே ஒருங்கிசைவும், அவரது நீதியான பிரமாணங்களுக்கு, அதே மரியாதையும், தீமையான தாக்கங்களின் செல்வாக்குகளிலிருந்து அதே விடுதலையும், பூமியிலும் காண்பதற்கு வாஞ்சை மிகவும் எடுப்பாய் இருக்கிறது.

2.2 ‘தேவனுக்கு உன்னத சிறந்த அன்பு’, அயலானுக்கு சமமான அன்பு’ என்பதாக தேவனால் கொடுக்கப்பட்டதும், யேசுவால் ரத்தினச் சுருக்கமாக்கப்பட்டதுமான உன்னதக் குறிக்கோளை நெருங்கிய குடும்ப ஜீவியத்திலும், சமுதாய பரந்த அமைப்பிலும் அடைவதைவிட, வெறேதும் சிறப்பாக இருக்க முடியாது. இந்த பூமியானது, நமது அறிவுக்கு அப்பாற்பட்ட இனி வரும் யுகயுகமாய் மனுக்குல குடியிருப்புக்கான வாசஸ்தலமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதனை அநேகரால் கண்டுகொள்ள கூடாதிருந்தாலும், அதுவே இந்த ஜெபத்தின் உட்கருத்தின் ஏற்பாய் இருக்கிறது.

3. ஆனால் அதனை சந்தேகித்து கேள்விகள் எழும்புகின்றன. இன்றைய நிலையில் உலகம் நிச்சயமாக அதற்கு மிகவும் அசாதாரணமான சூழலின் கீழ் இருக்கிறது. மேலும் ஜீவிய காலம் முழுவதும் கற்றக் கல்வியறிவு ஒவ்வொரு சந்ததியிலும் இருந்து அடுத்து (மரணத்தில்) தொலைந்து போகிறதாகக் காணப்படுகிறது. மரணம் தவிர்க்க முடியாததாய் இருக்கிறது. எனினும் இயேசு, ‘தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் (அழிந்து போகாமல்) நித்திய ஜீவனை அடையும்படி அவரை தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்” என்று (யோவா 3:16,17) கூறுகிறார். தேவன் தமது குமாரனில் விசுவாசமாய் இருக்கிறவர்கள் ரட்சிக்கப்படுவதற்காகவும், நித்திய ஜீவனைப் பெறுவதற்காகவும் அவரது குமாரனை அனுப்பினார் என்று இயேசு கூறுகிறார்.

4. ரட்சிக்கப்படுதல் என்றால் என்ன? ரட்சிக்கப்படுதலுக்கு விசுவாசம் ஒரு நிபந்தனையாக இருக்குமானால், ரட்சிக்கப்படாதவர்களுக்கு அதாவது விசுவாசியாதவர்களுக்கு என்ன நேரிடும்? மனிதர்கள் ரட்சிப்படையும்படி வானத்தின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கும் அந்த ஒரே நாமத்தை (யேசுவை - அப் 4:12) அறியக்கூடாது போனவர்களின் வருங்கால நிலையென்ன? அதாவது கிறிஸ்து யேசுவுக்கு முன், வாழ்ந்து மரித்துபோனவர்களின் வருங்கால நிலை என்ன? மனநிலைக் குன்றினதினால் யேசுவை ரட்சகராக அறிந்துக்கொள்ளக்கூடாதவர்களின் வருங்கால நிலையென்ன? இன்றுங்கூட செய்தியை கேட்காதவர்களும், தேவனுடைய நோக்கத்தையும் கிறிஸ்துவின் ஊழியத்தையும் குறித்து உண்மையை கண்டுக்கொள்ளக் கூடாதவர்களும், ஊனமானவர்களும், தேவனற்ற உலகத்தின் செல்வாக்குகளால் பாதிக்கப்பட்ட பண்புடையவர்களுமானவர்களின் வருங்கால காரியம் என்ன? 'ரட்சிக்கக்கூடாதபடிக்கு, கர்த்தருடைய கரம் குறுகிப்போகவில்லை....' (ஏசா 59:1) அவ்விதம் வேதாகமத்தில் பதில் இருக்கிறது என்பதாக வேதாகமம் நமக்கு உறுதியளிக்கிறது.

## இரட்சிக்கப்படுதல் என்றால் என்ன?

5.1 தேவன் விசுவாசிக்கிறவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்க வாக்குப்பண்ணியிருக்கிறதால் மரணமே சத்துருவாக இருக்கிறது என்பது அதிலிருந்து புரிந்துகொள்ளுகிறோம் (1கொரி 15:16). ஆகவே சத்துருவாகிய மரணத்திலிருந்து நம்மை மீட்டு விடுவிக்க அவர் வாஞ்சிக்கிறார். மரணத்துக்குப் பின்பு பரலோகத்தில் நித்தியகாலமாக பூரிகைகளை ஊதிக் கொண்டும், விண்ணுலக சிங்காசனத்தைச் சுற்றி உலாவிக் கொண்டும், பூமி வெந்துருகி போவதைப் பார்த்துக் கொண்டும் இருப்பார்கள் என்பதான, இடைக்கால கருத்துக்களை சத்திய அறிவுபூர்வமான சிந்தனை நிராகரிக்கிறது. மரணத்திற்குள் சென்ற அனைவரும் ஒன்றுமறியாத நித்திரை நிலையைத்தான் அடைகிறார்கள் என்பதாக வேதவாக்கியங்கள் கூறுகின்றன (பிர 9:5,6,10; 3:19-21; யோபு 16:10,21; சங் 146:4; யோவா 5:28; 11:11,13).

5.2 எனினும் கிறிஸ்தவர்கள் இரட்சிப்புநாளில் (Day of Salvation – 2கொரி 6:2; 1பேது 1:4 - சுவிசேஷயுகத்தில் - பரம அழைப்புக்கான காலத்தில்) உண்மையாக விசுவாசமாய் இருந்தவர்களுக்கு பரலோகுடியிருப்பு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டு இருக்கிறது என்பதை சரியாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பரலோக சிந்தையுடையவர்களுக்கு, பூமி ஒரு தற்காலிக குடியிருப்பாக இருக்கிறது. இந்த பூமியில் குடியிருக்கும்போது, பரலோகத்தில் ஒரு இடத்தில் தங்களை பொருத்தமாய் பொருந்தச் செய்வதற்காக இம்மையில் கடினமான பாடங்களைக் (அப் 14:22) கற்று குணாம்சங்களை விருத்தி செய்து கொண்டனர்.

6.1 மிகக்கவனமான வேதாகம மாணவர்களால், கிறிஸ்துவின் பாடுகளிலும் வெகுமதிகளிலும் பங்குகொள்ள சிலருக்கு சிலாக்கியம் இருப்பதைக் குறித்தும், அவ்விதமாய் பூமியை அஸ்திபாரப்படுத்துவதற்கு முன்பே தேவன் சித்தமுள்ளவராய் இருந்தார் (எபே 1:4) என்பதைக் குறித்தும் தேவனுடைய வார்த்தைகளிலிருந்து கண்டுக்கொள்ள முடியும். அவ்விதமானதொரு உன்னதமான வாய்ப்பு, இயேசு பூமிக்கு வந்து, 'பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது' (பரலோக ராஜ்யம் கையருகே) என்று கற்றுக்கொடுப்பதற்கு முன், மனிதர்களுக்கு தெரியாது.

6.2 யூதர்களைப் பொறுத்தமட்டும், அவர்கள் தேவனோடு அவர்களது உடன்படிக்கையில் உண்மை விசுவாசத்தோடு இருந்தற்கான வெகுமதி, பூமியில் ஒரு வளமான நிலையைப் பெறுவதாகும். ஆனால் தெய்வீக குணங்கொண்டவர்களில் மிகவும் சொற்ப்பபேர் மட்டும், தேவனுடைய காரியங்களின் மகா உன்னதத் திட்டத்தில் மனுக்குலத்துக்கான உயர்ந்த சிறந்த பலாபலனை மங்ககலாகக் கண்டனர்.

7. அப்படிப்பட்டதொன்றை மங்கலாக கண்ட முற்கால தேவ பக்தியான மனிதர்களில் மிக உன்னதமானவர் ஆபிரகாம் ஆவார். தேவனுடைய சிநேகிதன் என்று அவர் அறியப்பட்டார் (யாக் 2:23). அவருடைய விசுவாசமும், கீழ்ப்படிதலும் அவருக்கு உன்னத சிலாக்கியங்களைக் கொண்டுவந்தன. ஆபிரகாமுக்கு சுவிசேஷம் முன்னதாகவே பிரசங்கிக்கப்பட்டதென்று வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கிறது. ஆபிரகாம் ஏதோவொரு வழியில், தூரத்திலிருக்கிற ஒரு சிறந்த தேசத்தைக் குறித்து அதாவது பரம ராஜ்யத்தைக் குறித்து ஒரு கருத்துப் படிவத்தை புரிந்து கொண்டவராய் இருந்தார் (கலா 3:8; எபி 11:8-16). எனினும் ஆபிரகாம் அநேகமாக பூலோக ரீதியில் தேவன் அவர்களுக்குக் கொடுத்த அவர்களது சொந்த தேசத்தில் ஒரு பெரிய தேசமாக ஆகவும், எதிரிகளின் படையெடுப்பிலிருந்து பாதுகாப்பாக ஆகவும், பூமிக்குரிய வளத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் ஆகவும், மற்ற அனைத்து தேசங்களுக்கும் ஆசீர்வாதமாக (ஆதி 12:2-6; 17:6-8; 22:15-18) நிர்ணயிக்கப்பட்டவர்களாய் ஆகவும், நம்பிக்கைகளையும், எதிர்பார்ப்புகளையும் மட்டுமே கொண்டதொரு ஒரு ஜனத்துக்கு முற்பிதாவாக ஆனார். இந்த நம்பிக்கைகள் தாவீது, சாலமோன் ஆகிய ராஜாக்களின் கீழ் ஒரு குறிப்பிட்டளவுக்கு பெறப்பட்டிருப்பினும், மரணமானது தடுக்கப்படாது அதன் வேலையை செய்தது, அதன் சாபத்திலிருந்து ஒரு இரட்சிப்பும் கிடைக்கவில்லை. ஜீவன் அதன் எல்லா பூரணத்திலும் எந்த வழியிலும் அவர்களுடைய பிடிக்குள் இருக்கவில்லை.

8. தேவனுடைய தயவையும், வாக்குதத்தங்களையும் பெற்றிருந்த தேவஜனமே கடின உழைப்பு, துயரம், வியாதி, மரணம் போன்றவைகளின் பொதுவான அனுபவங்களை அனுபவிக்க வேண்டுமானால் (அவை இரண்டும் இல்லாத) பொதுவான உலகத்துக்கு என்ன நம்பிக்கை கொடுக்கப்பட முடியும்?

## சந்தோஷ செய்தி

9. ஆபிரகாமுக்கு சுவிசேஷம் முன்னதாகவே அறிவிக்கப்பட்டது(கலா 3:8). அது தேவன், மனுக்குலம் முழுவதையும் மரண தீர்ப்பிலிருந்து (Death Sentance) மீட்டுக் கொள்ளுவதற்காக, தமது மனதில் வைத்திருந்த மா உன்னதத் திட்டத்தின் குட்டிச் சித்திரமாக இருக்கிறது. இயேசு, 'இழந்துபோனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்தார்' (லூக் 19:10) என்று இயேசு கூறுகிறார். அவ்விதம் இழந்துபோனது ஜீவனையேயாகும். மனுக்குலச் சரித்திரத்தின் ஆரம்பத்தில் கீழ்ப்படியாமை எனும் செயல், சிருஷ்டிகரின் தயவை (நித்திய ஜீவனை) மனுக்குலத்திடமிருந்து பறித்துக்கொண்டது. சிருஷ்டிகர் மட்டுமே நித்திய ஜீவனுக்கேற்ற நிலைமைகளைக் கொடுக்க முடியும். அப்போஸ்தலன் கூறுவதுபோல, ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும், உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷருமே பாவஞ்செய்தபடியால் மரணமே எல்லோருக்கும் வந்தது (ரோம 5:12).

10. ஆபிரகாமுக்குக் கொடுத்த தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படி தனி மேம்பாடான முன் அம்சம் என்ன? பூமியிலுள்ள ஜனங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி 12:3; கலா 3:8) என்பதே அதுவாகும். இந்த உன்னத நோக்கம் நிறைவேறுவதற்கு வழிமுறை என்ன என்பது, ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை ரட்சிக்கிற மீட்பராக (மத்1:21), இயேசு வந்தபின்பே புரிந்து கொள்ள முடிந்தது. பரிசுத்த பவுல், கலா 3:16 இல் இயேசு கிறிஸ்துவே ஆபிரகாமின் மெய்யான வித்து என்பதாயும் (தமிழ் வேதாகமத்தில் சந்ததி என்று மொழியாக்கம் செய்திருப்பது தவறாகும். அது Seed - வித்து என்று இருக்க வேண்டும் - ஆங்கில வேதாகமம் பார்க்கவும் - ஆதி 3:15) அந்த வித்தின் மூலமே தேவனுடைய அன்பு எல்லா மனுக்குலத்தையும் ஆசீர்வதிக்க பாய்ந்தோட இருக்கிறது என்பதாயும் கூறுகிறார்.

11. எனினும், கிறிஸ்துவின் வேலையைக் குறித்த மேலோட்டப் பார்வையில் தேவனுடைய ரட்சிப்பின் திட்டம் தோல்வியாகத் தெரிகிறது. மனுக்குல சந்ததியின் மொத்தத் தொகையை ஒப்பிடுகையில், கொஞ்சம் பேரே ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற கருத்து, ஒரு வருந்தக்கூடிய ஒரு முடிவுக்கு

நம்மை நடத்துகிறது அல்லவா. ஏன் அப்படி? தேவனுடைய நோக்கத்தை சரியாக புரிந்துகொள்ளாததே காரணமாகும்.

## தேவனுடைய இருபடி நோக்கம்

12. வேத வாக்கியங்கள், எந்த சந்தேகத்துக்கும் வழியில்லாது, இயேசு கிறிஸ்துவின் மூலம் இரண்டு இரட்சிப்புக்களை முன் வைக்கின்றன. அவைகள் முற்றிலும் தனிப்படுத்தப்பட்டவைகளும், தெளிவாக வித்தியாசப்படுத்தப்பட்டவைகளும் ஆகும். ஒன்று, பரலோக சுதந்தரிப்பும் (Heavenly inheritance), மற்றொன்று பூலோக சுதந்தரிப்புமாகும் (earthly inheritance), சத்திய வார்த்தைகளை சரியாக பகுத்து (rightly divided) அறியும்போது (2தீமோ 2:15) தேவசத்தியத்தை, அவைகளில் வித்தியாசங்களை நம் மனதில் நிறுத்த உதவிசெய்யும்.

13. மகா உன்னத பரலோக இரட்சிப்பு, விசேஷமாக தெரிந்துக்கொண்ட வகுப்பாருக்குரியது. அவர்கள் யேசுவோடு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆபிரகாமின் பரலோக வித்தின் பாகமாக கருதப்படுகிறார்கள். அவர்கள் இந்த வாழ்க்கையில் யேசுவோடு பாடுகளை அனுபவிக்கவும், மறுமையில் அவருடைய சிங்காசனத்தில் பக்குகொள்ளவும் நிர்ணயிக்கப்பட்டவர்கள் ஆவர். (எபி 2:3; கலா 3:29; 2தீமோ 2:12) இந்த தெய்வீகத்தைப் பெறுவதற்கான அழைப்பு, இயேசு தம்முடைய சீஷர்களை கரு மையமாக சேகரித்தபோது, அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்தில் ஆரம்பித்தது. அவ்விதம் இந்த வரைப்படத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற சுவிஷேசயுகம் ஆரம்பித்தது.




14. யூத ஜனம் விசுவாசமுள்ள ஒரு சிலரைத்தவிர, யேசுவை தங்களுடைய மேசியாவாக ஏற்றுக்கொள்ளாது புறக்கணித்தனர். அவ்விதமாக அந்த வித்தின் பாகமாக அதாவது கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினர்களாக ஆவதற்குரிய அழைப்பையும் புறக்கணித்தனர். ஆகவே அதற்குரிய அந்த அழைப்பு புறஜாதிகளுக்கு, அதாவது எல்லா ஜனங்களுக்கும் திறவுண்டது (மத் 28:19; அப் 15:16). ஆபிரகாமுக்கு அவனுடைய வித்து வானத்தின் நட்சத்திரங்களைப் போலிருக்கும் (ஆதி 22:17) என்ற விதமாய் சொன்ன தேவனுடைய முறையானது, இப்பொழுது அர்த்தமுள்ளதாயிற்று. யேசுவில் விசுவாசமுள்ளவர்களாய், ஆபிரகாமைப் போல அதே விசுவாசத்தை, ஆனால் இப்பொழுது தெளிவாக்கப்பட்ட புதிய பரம நம்பிக்கைகளோடு அப்பியாசிக்கிறவர்கள், ஆபிரகாமுடைய ஆவிக்குரிய பிள்ளைகளாக கருதப்படுகிறார்கள் (ரோம 4:11; கலா 3:7) என்பது இப்பொழுது அர்த்தமுள்ளதாயிற்று.

15. அடுத்த பகுதியாக பொதுவான இரட்சிப்பு (யூதா 3) இலவச கிருபையாக எல்லாருக்கும் அதாவது ஏதோவொரு காரணத்தினால் பரலோக சுதந்திரத்துக்கு அழைக்கப்படாத எல்லோருக்கும்

கொடுக்கப்படுகிறது. தெரிந்து கொள்ளப்படாதவர்களுக்குரிய இந்தப் பொதுவான இரட்சிப்பு ஆயிரவருட யுகத்தில் பூமியில் கிறிஸ்து ஆளும் பொழுது கொடுக்கப்பட இருக்கிறது. இந்த ஆயிரவருட யுகத்தை வரைப்படத்தில் காணவும்.

16. உலகத்துக்கான தேவனுடைய மா உன்னத அன்பு, எந்தவிதத்திலும் மகா ரட்சிப்பின் நாளில் (சுவிஷயுகத்தில்) அந்த அழைப்புக்கு செவிசாய்த்து விசுவாசிக்கிறவர்களுக்கு மட்டுமல்ல. அவருடைய அன்பு மனுக்குலத்தின் ஒவ்வொரு தனிப்பட்டவர்களையும் அதிக நிச்சயமாக சேர்த்துக் கொள்ளுகிறது. எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதாயும், எல்லாரும் சத்தியத்தைப் பற்றிய அறிகிற அறிவை அடைய வேண்டும் என்பதாயும் தேவன் வாஞ்சிக்கிறார். ஆகவே இயேசு எல்லாருக்காகவும் தம்மையே மீட்கும் பொருளாக (ஈடு கிரயமாகக் - Corresponding price) கொடுத்தார் (1தீமோ 2:4-6).

### தேவதிட்டத்தை தீர்க்கமாக வரை (ஆபகூக் 2:2)

17. ஆக்கினைக்குள்ளாக்கப்பட்ட ஆதாமின் இடத்தை எடுத்துக்கொள்ள, இயேசு தம்மையே பலி செய்தது, ஆதாமின் வழி வந்த சந்ததியாகிய மனுக்குலமனைத்தையும் மரண சாசனத்திலிருந்து விடுவிக்கிற விளைபயனைக்கொண்ட விதியாக இருக்கிறது. அது, பரலோக சுதந்திரத்துக்கு அழைக்கப்படாதவர்களுக்கு, தேவனுடைய நித்தியநோக்கத்துக்கு முக்கிய பங்கான பூரணமான நித்திய ஜீவனை பூமியில் அடையும் வாய்ப்பைக் கொடுக்கிறது. ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் அதன் வெகுபரந்த தரிசனத்தில் காணப்படுகிறது. ஆபிரகாமுடைய சுபாவ வழிவந்தோர் நடைமுறையில் எண்ணப்படமுடியாதவர்களே. எனினும் காலத்தின் நிறைவில் விசுவாசிகளாக ஆன எல்லோரும் கிறிஸ்துவின் கீழ் கூட்டப்படும்பொழுது (எபே 1:10) ஆபிரகாமுடைய பூமிக்குரிய வித்து மெய்யாகவே கடற்கரை மணலைப்போல் இருக்கும் (ஆதி 22:17).

### பரலோக ரட்சிப்பு

18. இந்த பாக்கியம் பெற்ற வகுப்பாராக ஆகுவதற்கான அழைப்பு வரம்புக்குட்படுத்தபட்ட ஒன்று. இயேசு தமது முதல் வருகையில் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை (யோவா 3:13) என்று கூறினார். பேதுருவும் தாவீதைக் குறித்து அதையே சொல்லுகிறார் (அப் 2:34). இயேசு யோவான் ஸ்நானனின் சிறப்பை அங்கீகரித்தபோதிலும், பரலோக ராஜ்யத்தில் சிறியவனாக இருக்கிறவன் யோவானைக் காட்டிலும் பெரியவனாக இருக்கிறான் என்று சொல்லுவதில், (மத் 11:11) யோவான் பூமிக்குரிய உயிர்த்தெழுதலுக்குரியவன் என்று அர்த்தப்படுத்துகிறார். யேசுவே வழியும் சத்தியமும் ஜீவனுமானவர் (யோவா 14:6). அவர் பாவத்துக்கான கிரயத்தை செலுத்தும்வரை அந்த அழைப்புக்கு வழி திறக்கப்படவில்லை.

19. சீஷர்கள் பெந்தெகொஸ்தேயில் பரிசுத்தாவியை பெற்றனர். அது அவர்கள் தெய்வீக சுபாவத்திற்கு ஜெனிப்பிக்கப்பட்டவர்களாய், சபையின் அங்கத்தினராய் ஆகக்கூடியவர்கள் என்பதற்கும், அவர்களுடைய வேலை மெய் உறுதிபாடோடு ஆரம்பித்தது என்பதற்கும் தெய்வீக நிச்சயமாய் இருக்கிறது. சபையின் ரட்சிப்பை நிர்ணயிக்கும் நிபந்தனைகள், உலகத்து ரட்சிப்புக்குரிய நிபந்தனைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். அவர்களுடைய பூலோக ஜீவிய காலத்தில் தெய்வீக அழைப்பின்கீழ் கிறிஸ்துவோடு பாடுபட உலகத்தைவிட்டு அழைக்கப்பட்டவர்கள் ஆவர். அவர்கள் ஆயிரவருட யுகத்தில் கிறிஸ்துவின் ராஜ்யமாக, அவர்கள் செயல்படும் காலத்தில் ஜீவ கிரீடத்தைப் பெற்று, கிறிஸ்து யேசுவோடு அவருடைய சிங்காசனத்தில் உட்காருகிறார்கள் (வெளி 2:10; 3:21).

20. வேதவாக்கியமும், உலக சரித்திரமும் சுவிசேஷயுகம் முழுவதும் வாழ்ந்த பரிசுத்தவான்களின் ஜீவியத்தைப் பற்றியும், மரணத்தைப் பற்றியும், உபத்திரவங்களைப் பற்றியும், ரத்தசாட்சியைப் பற்றியும், பதிவு செய்து இருக்கின்றன. அவர்களுடைய ஜீவியம், கொடிய பாடுகளைக் கோருகிற நிபந்தனைகளைக்கொண்ட ஒரு இடுக்கமான வழியாகும். அவர்களுடைய எஜமானோடு, தங்களுடைய சரீரங்களை ஜீவபலியாக படைத்தனர். அவர்கள் சுவிசேஷத்தை உலகத்துக்கு பிரசங்கித்தனர். யாரெல்லாம் தன் சிலுவையைத் தூக்கிக்கொண்டு (மத் 16:24) எஜமானைப் பின்பற்றி வந்து. அதன் மூலம் குறித்த காலத்தில் அதாவது புறஜாதியாரின் நிறைவு (fullness of gentiles – ரோம 11:25) வரும்போது, சபையில் சேகரிக்கப்பட, தெரிந்துக்கொள்ளப்படவிருந்தார்களோ அவர்கள் எல்லோரையும் தேடுவதற்காக, சுவிசேஷத்தை உலகத்துக்கு பிரசங்கித்தனர்.

### பரலோக ரட்சிப்புக்கு கதவு மூடப்படுதல்

21.1 நமது கர்த்தரால் அவரது முதல் வருகையில் இந்த பரலோக ரட்சிப்பு முதல் முதலாவது பேசப்பட ஆரம்பித்ததால் (எபி 2:3), அவ்விதம் அதற்கு ஒரு திட்டமான ஆரம்பம் இருந்தது. அதுபோல அதற்கு ஒரு முடிவும் இருக்க வேண்டும். அது முடிய வேண்டியது ஒரு அவசியமாயிருக்கிறது. ஏனெனில் மனுக்குலம் அனைத்தையும் ஆசீர்வதிக்கிற ஒரு பெரிய அடுத்ததொரு வேலை ஆரம்பிக்க அவசியமாயிருக்கிறது. அவ்விதம் பரலோக ராஜ்யத்தில் பங்கு கொள்வதற்கான வாய்ப்பு எப்பொழுது ஒரு முடிவுக்கு வருகிறது?

21.2 யேசு, தாம் திரும்பி வருவதாக, சீஷர்களுக்கு வாக்குக்கொடுத்து இருக்கிறார். அவர்களுடைய விசுவாச ஓட்டம் அவர்களுடைய எஜமானோடு பரலோக சுதந்திரத்தை அவர்களுக்கு பெற்றுக் கொடுத்திருக்கிறதால், அவர்களை அவருடைய வந்திருத்தலில் தம்மோடு சேர்த்துக் கொள்ளுதல், அவருடைய முதல் நோக்கமாகும் (யோவா 14:3). இந்த வெகுமதியானது சபைக்கு சோம்பலான சுயநல பேரின்பம் நிறைந்த ஒரு நித்தியத்தையோ, அவர்களுடைய புதிய மகிமையான ஸ்தானங்களில் முழுமையும் தனிப்பட்ட தன்னல இன்ப நுகர்வையோ அர்த்தப்படுத்தவில்லை. அவர்கள் ஒரு நோக்கத்தோடு அழைக்கப்பட்டிருக்கிறார்கள் (எபே 1:9-11; 2தீமோ 1:9), அப்போஸ்தலனாகிய பவுல், பரலோகத்திலும் பூமியிலுமுள்ள அனைத்து காரியங்களையும் தேவனோடு ஒப்புரவாக்கும் ஒரு மகத்துவமான வேலையில் பங்குகொள்ளும் ஒரு நோக்கத்திற்காக அழைக்கப்பட்டிருக்கிறார் என்று கூறுகிறார். 2கொரி 5:19

22. அவ்விதம் சபையானது அவர்களது உயிர்த்தெழுதலில் பரலோக பிதாவின் தெய்வீக சுபாவத்தை அடைவது மட்டுமல்லாது, அவருடைய குணாம்ச பண்புகளையும் பிரதிபலிக்கிறது. உலகம் அழிந்து போகாமல், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தேவன் உலகத்திற்காகக் கொண்டுள்ள மெய்யான வாஞ்சை நிறைந்த அதே அன்பை, அவர்களும் பிரகாசிக்கச் செய்கிறார்கள். நாம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் இருக்கிறோம் என்பதற்கான அநேக ஆதாரங்களை வேதாகமம் கொடுக்கிறது. பரிசுத்த தீர்க்கதரிசிகளால் சொல்லப்பட்ட இழந்து போனதை திரும்பப்பெறுகிற காலம் (Time of Restitution – அப். 3:19-21-ஆங்கில வேதாகமம் காண்க) அதிவிரைவில் ஆரம்பிக்க விருக்கிறது.

### பூலோக ரட்சிப்பு

23. பரலோக ரட்சிப்புக்கான பரம அழைப்புக்கான வாசல் மூடப்படுகிறதில், பூலோக ரட்சிப்புக்கான அடுத்த வாசல் திறக்கிறது. ஆதாமுக்குள் எல்லோரும் மரிக்கிறதுபோல கிறிஸ்துவுக்குள் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (1கொரி 15:22). நம்முடைய கர்த்தரின் பலியின் பிரதான காரண நோக்கம், உலகத்தை மரண சாசனத்திலிருந்து மீட்பதே. அது உலகத்தை மனுஷீகத்திலிருந்து ஆவியின்

சுபாவத்திற்கு பொதுவான ஒரு மாற்றத்தை கொண்டது அல்ல. ஆனால் அது சிருஷ்டிகருடைய சாயலில் உண்டாக்கப்பட்ட அசல் மனிதனுடைய பூரணத்திற்கும், அவனது சுகத்திற்கும், நித்திய சந்தோஷத்திற்கும் தேவையான ஒவ்வொரு ஆசீர்வாதங்களால் சூழப்பட்ட நிலைமைக்கும், தூக்கியெடுத்து நிறுத்தும் உத்திரவாதத்தை அளிக்கிறது.

24. துன்பத்தையும் வியாதியையும் மரணத்தையும் கொண்ட பொதுவான அனுபவத்தால் இன்னும் பாதிக்கப்படுவதால் முழுமையான கருத்தில் ஒருவனும் இரட்சிக்கப்பட்டாயிற்று என்று இப்பொழுது கூற முடியாது. எனினும் அநேகருக்கு தேவனுடைய வார்த்தையில் ஆழமான விசுவாசம் இருக்கிறது. ஏதாவதொரு காலத்தில் ஆபிரகாமின் வித்துக்குள் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி 12:3) என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தை நம்புகிறார்கள். அப்போஸ்தலன் கூறுகிறதுபோல சர்வ சிருஷ்டியும் தேவனுடைய புத்திரர்கள் வெளிப்படுவதற்காக பிரசவ வேதனைப்பட்டு அறியாமலேயே காத்துக்கொண்டிருக்கிறது (ரோம 8:19-22) அப்பொழுது கிறிஸ்துவும், அவருடைய சபையும், இழந்து போனதைத் திரும்பபெறும் மகா வேலையை ஆரம்பிக்கிறார்கள் (2கொரி 5:19; வெளி 22:17).

25. பரி.பேதுரு, இந்த வரவிருந்த மகிமையான நம்பிக்கையளிக்கிற வாய்ப்பை, நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்னதாகவே சுட்டிக்காட்டி, அதனை தெம்பூட்டும் காலம் (The Time of Refreshing - புத்துணர்வூட்டும் காலம்) என்று அழைக்கிறார். மேலும் அவர் அதேவிதமாக எல்லா தீர்க்கதரிசிகளும் அந்த ஆயிரவருடயுக ஆசீர்வாதத்தை விளக்கியிருப்பதாகக் கூறுகிறார். இந்த தேவனுடைய ராஜ்யமான ஆயிர வருட யுகத்தில் யேசுவும் அவரது மணவாட்டியும் பூமியின் மேல் ஆண்டு, அதனை தெய்வீக தத்துவங்களுக்கு இணக்கமாக மறுபடியும் கொண்டு வருவார்கள். (அப் 3:19-21 ஆங்கில வேதாகமத்தை ஒப்பிட்டு படிக்கவும்). உலகம் ஆயிரக்கணக்கான வருடங்களான சரீர, மன, சன்மார்க்க, மத ரீதிகளில் இப்பிரபஞ்சத்தின் அதிபதியாகிய சாத்தானின் கீழ் குன்றிப்போன பின்பும் (யோவா 14:30), தீமையோடு ஒரு கசப்பான அனுபவத்தைப் பெற்ற பின்பும், பூமியின் ஜனங்கள் இழந்து போனதைத் திரும்பப் பெறும் காலத்தில் அவர்களுடைய சிருஷ்டிகரை அறிய வருவதாலும், மனித சிந்தனைக்கும், கற்பனைக்கும் அப்பாற்பட்ட முன்னிருந்த வளமான வாய்ப்புகளையும், சந்தோஷங்களையும் அவர்கள் கண்டு கொள்வதால், பெரியதொரு அறிவூட்டும் செயல் திட்டத்தின் கீழ் பயிற்சி பெறுவார்கள்.

## மறுஜென்மக் காலம்

26. கிறிஸ்து, தாம் ஆளுகிற காலத்தை நோக்கிப்பார்த்து அதனை மறுஜென்மக்காலம் (regenretion - மத். 19:28 - மரணத்திலிருந்து எழுந்து வந்து, புது ஜீவனைப் பெறுவதற்காக உருவாக்கப்படுதல்) என்று குறிப்பிடுகிறார். அதனை சபையை மட்டும் குறித்து அவர் சொல்லாமல், பொதுவாக அந்தக் காலத்தைக் குறித்து சொல்லுகிறார். சிலர் (உடனடியாக) நித்திய ஜீவனுக்கும் மற்றவர்கள் நியாயத்தீர்ப்பு அடைய எழுந்து வருவதைக் குறித்து கூறுகிறார். (ஆக்கினையடையுபடி - யோவா 5:29 - எழுந்து வருவார்கள் என்பது சரியான மொழியாக்கம் அல்ல - ASV, RHV, Diaglott மொழியாக்கங்களைக் கவனிக்கவும்) ஜட்ஜ்மெண்ட் என்பது தண்டனையை வெறுமனே கொடுப்பது அல்ல. (நிதானித்தறிதலைக் கற்றுக் கொள்ள - Judgement - நியாயத்தீர்ப்பு நாள் என்ற தலைப்பில் செய்தியைக் கொண்ட சிறு புத்தகத்தைப்பெற எங்களுக்கு எழுதுங்கள் - ஏசா 26:9; 2:4) மனுக்குலம் (ஆதாமுக்குள்) ஏற்கனவே மரணத்துக்குள் நியாயந்தீர்க்கப்பட்டாயிற்று. அந்த தண்டனையை எடுத்துப் போடுதல் தீமைக்குப் பதில் நன்மையோடு கொண்டதொரு அனுபவத்தையும், முழுமையான நேர்மையான ஒரு பரீட்சையையும் கொண்டுவரும். அந்த அனுபவம் மனுக்குலத்துக்கு ஒருபோதும் இன்னும் இருந்ததில்லை.

27.1. 'நியாயத்தீர்ப்பு நாள்' என்பது உலகமக்கள் நீதியாய் நிதானிக்கப்பட்டு ஆளப்படுதலாகும். அது போதிக்கப்படுதல், சிட்சையால் சரிசெய்யப்படுதல் ஆகியவையும் கொண்டதாகும். எல்லோருக்கும் வெற்றி தோல்விக்குரிய காரியங்கள் என்ன என்பதைக் குறித்து தெளிவாக புரிந்துகொள்ளும் நிலைக்கு வரவேண்டும். மேலும் எல்லோரும் தேவன் அவர்களுக்குக் கொடுத்திருக்கும் சுயசித்தத்தை பயன்படுத்தி நித்திய ஜீவனைப் பெறுவதற்கான நிபந்தனைகளை தெரிந்து கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ உதவி செய்யப்பட வேண்டும்.

27.2 தேவனோடு ஒப்புரவாகுதல் மாற்றமுடியாத நிஜமாக ஆகும். அப்பொழுது உள்ளான இருதயமும் மனமும் பெரிய அளவாய் மறுஜென்மம் அடையும். அதன் பிரதிபலிப்பாக வெளிப்படையான காணக்கூடிய விதமாக மனுஷசரீரம் புதுப்பித்தலும், ஆரம்ப பூரண நிலைக்குரிய கனத்துக்கும் மகிமைக்கும் (சங் 8:5) தூக்கி நிறுத்தப்படும். நியாயத்தீர்ப்பு (Judgement - நிதானித்தறியும்) நாள் வரவேற்கப்படத்தக்கதான ஒரு காலமாகும். சங்கீதக்காரன் கூறுகிறதுபோல, வானங்கள் மகிழ்ந்து பூமி பூரிப்பாகி, சமுத்திரமும் அதன் நிறைவும், முழங்குவதாக. நாடும் அதிலுள்ள யாவும், களிகூர்வதாக. "அப்பொழுது கர்த்தருக்கு முன்பாக காட்டு விருட்சங்களெல்லாம் கெம்பீரிக்கும். அவர் வருகிறார். அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார். அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களை சத்தியத்தோடும் நியாயத்தீர்ப்பார்" சங் 96:1-13.

28.1. நீதி வாசஞ்செய்யும் புதிய பூமியைக் குறித்து நாம் கவனமாய் கருத்தில் சிந்திக்கும்பொழுது நடைமுறைக்குரிய அநேக காரியங்கள் நம் மனதில் வரும். அவைகளை தற்காலிகமாக ஓரங்கட்டிவிட்டு, தேவனை அவரது வார்த்தையின்படி பிடித்துக் கொள்ளுவோம். அசைக்கமுடியாத விசுவாசத்தோடு அவரது ராஜ்யம் வருவதற்காக ஜெபிப்போமாக. கிறிஸ்து ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் உலக ஆளுகையின் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு பூமியில் ஆளும்போது, மனுக்குலத்து பெருவாரியான ஆண்களும், பெண்களும் தேவனுடைய உன்னத அன்புக்கு நிச்சயமாக செவி சாய்ப்பார்கள். அந்த நித்திய ஜீவனுக்குள் அதன் எல்லா பூரணத்தில் பிரவேசிப்பார்கள். அதுவே நமது ஆரம்ப அசல் இறுதி விதியாகும் (destiny).

28.2 வடிவிலும், அம்சத்திலும், செம்மையாகவும், குணாம்சத்தில் உன்னதமாகவும், தேவனுடைய நீதியான பிரமாணங்களோடு மனதிலும் இருதயத்திலும் மாற்றக்கூடாதவாறு இணைத்துக் கோர்க்கப்பட்டவர்களாகவும், வரவிருக்கிற மகிமையான யுகங்களுக்குள் பிரவேசிப்போம். அதாவது தேவனுடைய நித்திய நோக்கத்தில் மேலும் மேலும் அவைகள் நமது இடத்தை வெளிப்படுத்திக் கொடுக்க நாம் அந்த மகிமையான யுகங்களுக்குள் பிரவேசிப்போம்.

TWO SALVATIONS - BS 792

மேலும் இலவச பிரதிகளுக்கு தொடர்பு கொள்ளவும்:

**98 415 400 81**

**www.divineplan.in**